23.01.2026

OS.1/2024

DW1- சுப்பிரமணிய நாடார் – த/பெ. குத்தாலிங்க நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.01.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> (வாதிகள் தரப்பில்)

1. என்னிடம் காட்டப்படுவது இன்றைய தேதியில் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட பட்டா என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் வழக்கு சொத்திற்காக இன்றைய தேதியில் வாதிகள் பெயரில் வழங்கப்பட்ட பட்டா தான் என்னிடம் காண்பிக்கப்படுவது என்று சொன்னால் சரியல்ல.

2. வழக்கு சொத்திற்கு வாதிகள் பெயரில் தான் நாளது வரை பட்டா எண்.684 இணையதளத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

3. நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணமானது செல்லப்பாண்டி என்பவரால் 1967 ஆம் வருடம் கிரையம் பெறப்பட்டு அவரது வாரிசுகளிடம் இருந்து பி.வா.சா.ஆ.1ன் படி கடந்த 25.08.2007 ல் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான்.

4. செல்லப்பாண்டி நாடாருக்கு கிரையம் கொடுத்த மூன்று நபர்களின் தகப்பனார் பெயர் ஆறுமுக நாடார் என்று பி.வா.சா.ஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி ஆறுமுகநாடாரின் தகப்பனார் பெயர் என்ன என்று எனக்குத் தெரியாது.

5. 1967 கிரைய பத்திரத்தில் (பி.வா.சா.ஆ.5) ஆறுமுக நாடார் வழியில் பூர்விகமாக கிரையம் பெறப்பட்டது என குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த ஆறுமுக நாடார் பெயரிலோ அல்லது அவரது தகப்பனார் பெயரிலோ உள்ள வருவாய் ஆவணங்கள் ஏதேனும் நான் கிரையம் வாங்கும் போது பார்வையிட்டேனா அல்லது இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை எனக்கு ஒரு வாத்தியார் தான் கிரையம் முடித்து கொடுத்தார்.

6. தபசில் சொத்து நஞ்சை வகைப்பாட்டைச் சேர்ந்த நிலம் என்றால் சரிதான்.

7. என் மீது யார் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றும் அவர்களது தகப்பனார் பெயர் என்ன என்று தெரியுமா என்றால் கிணற்று பாத்தியம் நிலத்தில் உள்ள ஒரு பங்காளி ஆவார்.

8. வழக்கு சொத்து வாதிகளின் பிராதில் வரிசையாக எடுத்துக்கூறி விவரத்துள்ளபடி வாதிகளுக்கு பாத்தியப்பட்டு வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

9. வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்தினை பொறுத்து நான் எந்த உரிமையும் இல்லாத செல்லப்பாண்டி நாடார் வாரிசுகளிடம் இருந்து பி.வா.சா.ஆ.1–ன் பேரில் எழுதிப் பெற்றுள்ள கிரைய ஆவணமும் அதன் அடிப்படையில் நான் தென்காசி வட்டாட்சியர் அலுவலகத்தில் வாதிகளுக்கு அறிவிப்பு இல்லாமல் மோசடியாக பெற்றுக்கொண்ட பி.வா.சா.ஆ.10 பட்டாவும், வழக்கிடை சொத்தில் எனக்கு எந்த உரிமையும்

ஏற்படுத்தி தராது என்றும் மேற்படி மோசடி ஆவணங்கள் அடிப்படையில் நான் வழக்கிடை சொத்தில் வாதிகளின் உரிமைகளை மறுத்து வம்பாக அவர்களது அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

10. வழக்கு சொத்திற்கும் நாளது தேதி வரை வாதிகள் பெயரில் பட்டா எண்.684 உள்ள நிலையில் நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.11 தீர்வை ரசீது என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்டு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேலும் தீர்வை ரசீது காலமான 2009 ம் ஆண்டில் தமிழக அரசின் உத்தரவுப்படி விவசாய நிலங்களுக்கு தீர்வை ரத்து செய்யப்பட்டது என்றும் உள்ளூர் நிர்வாகத்தால் தீர்வை வசூல் செய்யப்படவில்லை எனவும் அடங்கல் கணக்கு இல்லாமல் தாக்கல் செய்த தீர்வை ரசீது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

11. வழக்கு சொத்தின் அனுபவமானது வாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்பதால் வாதிகளின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஓம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.